புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • அக்டோபர் 24, 2024 • புரட்சி 24 • முழக்கம் 42 • விலை ரூ.3.00

## ஆளுநருக்கு எதிராகக் கழகம் ‘அஞ்சல் அட்டை’ப் போராட்டம்

*சென்னை D.D தமிழ் தொலைக்காட்சி அலுவலகத்தில் ‘ஹிந்தி மாத’ கொண்டாட்டம் 18.10.2024 அன்று நடைபெற்றது. அதில் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். இதில் பாடப்பட்ட தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலில் ‘தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்’ என்ற வரியை மட்டும் தவிர்த்துவிட்டுப் பாடப்பட்டது.*

*இதற்கு தமிழ்நாடு முழுவதும் இருந்து கடுமையான எதிர்ப்புகள் கிளம்பியது. மேலும் ஆளுநரின் தொடர் தமிழர் விரோதப் போக்கினைக் கண்டிக்கும் விதமாகக் கழக சார்பில் “தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்” என்ற வரியைக் குறிப்பிட்டு 1000 அஞ்சல் அனுப்பும் ஆர்ப்பாட்டம் கழக சார்பில் பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்றது. அவை பின்வருமாறு:-*

***சென்னை:*** *ஆளுநர் ஆர்.என்.ரவி பங்கேற்ற விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்தில் ‘திராவிடநல் திருநாடும்’ என்ற வார்த்தை புறக்கணிக்கப்பட்டதைக் கண்டிக்கும் விதமாக ஆளுநர் ரவிக்கு ‘திராவிடநல் திருநாடும்’ என்ற வரி அடங்கிய 1000 அஞ்சல் அட்டைகளை அனுப்பும் ஆர்ப்பாட்டத்தை சென்னை மாவட்டக் கழக சார்பில் நடத்தப்பட்டது. மேலும் ஆளுநருக்கு எதிராகக் கண்டன முழக்கங்களைக் கழகத் தோழர்கள் எழுப்பினார்கள். எழுதப்பட்ட 1000 அஞ்சல் அட்டைகளையும் அண்ணா சாலையில் உள்ள தலைமை அஞ்சலகத்தில் உள்ள தபால் பெட்டியில் போடப்பட்டது. பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி, தமிழ்நாட்டின் ஜீவநாடியான சமூகநீதி - பெண் விடுதலை - பெரியார் - அண்ணா - காமராசர் - கலைஞர் உள்ளிட்ட வார்த்தைகளைத் தொடர்ந்து புறக்கணித்துவரும் ஆளுநர் ரவி,*



*தற்போது தமிழ்த்தாய் வாழ்த்தில் இடம்பெற்ற திராவிடம் என்ற சொல்லைத் தவிர்த்துப் பாடியது ஆணவத்தின் உச்சம் என்று குறிப்பிட்டார். இந்நிலை மேலும் தொடர்ந்தால் அடுத்தகட்ட போராட்டங்களை நடத்தக்கூடும் என்றும் எச்சரித்தார். இதில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தென் சென்னை - வட சென்னை மாவட்ட நிர்வாகிகள் மற்றும் கழக இளைஞரணி - மாணவரணியினர் பங்கேற்றனர்.*

***திருப்பூர்:*** *திருப்பூர் மாவட்டக் கழக சார்பில் ஆளுநருக்கு 1000 அஞ்சல் அனுப்பும் ஆர்ப்பாட்டம் திருப்பூர் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. நிகழ்விற்குத் திருப்பூர் மாவட்டக் கழகத் தலைவர் முகில் ராசு தலைமை தாங்கினார். கழக சமூக வலைதளப் பொறுப்பாளர் பரிமளராசன் முன்னிலை வகித்தார், நிகழ்வில் மாநகரத் தலைவர் தனபால், மாநகரச் செயலாளர் மாதவன், மாநகர அமைப்பாளர் முத்து மற்றும் தோழர்கள் கார்த்திக், நஜ்முநிஷா, சங்கவி, பெரியார் பிஞ்சு ஆதன், தழல் சிறகன், இயல் ஆழியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.*



***தேனி:*** *தமிழ்நாட்டின் சுயமரியாதையைச் சீண்டிய ஆளுநர் ரவிக்கு 1000 அஞ்சல் அனுப்பும் ஆர்ப்பாட்டம் பெரியகுளம் வடுகபட்டியில் நடைபெற்றது. இதற்குத் தேனி மாவட்ட அமைப்பாளர் தேனி இராயன் தலைமை தாங்கினார். சந்திரன், பெரியார் சிவா முன்னிலை வகித்தனர். பெண்கள் விடுதலைக் கழக ஒருங்கிணைப்பாளர் தேனி தமிழரசி கண்டன முழக்கங்களை எழுப்பினார். தினேஷ், அம்பேத் பிரபா, அஸ்வின், கவினா, கவிநயா ஆகியோர் கலந்து கொண்டனர்.*

***மதுரை:*** *21.10.2024 அன்று மதுரை தலைமை தபால் நிலையம் முன்பு நடைபெற்ற 1000 அஞ்சல் அனுப்பும் ஆர்ப்பாட்டத்தில் ஆதித்தமிழர் கட்சி, பழங்தமிழர் இயக்கம், மக்கள் சட்டஉரிமை இயக்கம், தமிழக மக்கள் கழகம் உள்ளிட்ட இயக்கங்கள் பங்கேற்றனர்.*



***பொள்ளாச்சி:*** *20.10.2024 அன்று பொள்ளாச்சியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு யாழ் வெள்ளிங்கிரி தலைமை தாங்கினார். இதில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை, வெல்ஃபேர் கட்சி, தமிழ்நாடு தன்னுரிமை மீட்பு இயக்கம் உள்ளிட்ட இயக்கங்களின் சார்பில் தோழர்கள் கலந்து கொண்டனர்.*

## அஞ்சல் அட்டை கிடைச்சதா?

**தமிழ்நாடு ஆளுநருக்கு ‘அய்ரோப்பிய இறக்குமதி’ என்றாலே சுத்தமா பிடிக்காது; அதனால் தான் ‘திராவிடம்’ என்றாலே அவருக்கு கசக்கும். ரிஷிகள் முனிவர்கள் சனாதனப் பெருமைகளைப் பேசிக்கொண்டே இருப்பார். இந்த புராணக் கால விஞ்ஞானிகள் பற்றி ஆராய்ச்சிக்கு ஒரு மயிலாப்பூர் குழுவே ஆளுநர் மாளிகையில் இருக்கிறது என்கிறார்கள்? சனாதனக் காலத்துலேயே மிகச்சிறந்த ‘தகவல் தொடர்பு சேவைகளை’ ரிஷிகளும், முனிவர்களும் கண்டுபிடித்து பயன்படுத்தினார்கள் என்று அவர்கள் அடித்துக் கூறுகிறார்கள்.**




**அந்தப் புனிதமான ‘தகவல் தொடர்புகளை’ எல்லாம் நம்மை அடிமைப்படுத்திய பிரிட்டிஷ்காரர்கள் அழிக்க சதி செய்தார்கள். ஆளுநரால் இப்போதும் அதைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. ஆளுநர் அதற்காக கவலைப்படாத நாளே இல்லை. அதாவது அவர் தொடர்ந்து கண்ணீர் வடித்து கசிந்துருகி பேசிக்கொண்டே இருக்கிறார்.**

**சதிகார பிரிட்டிஷ்காரன் என்ன செய்தான் தெரியுமா? முதலில் தபால் ஆபிஸ் என்றான். தந்தி என்றான். தொலைபேசி என்றான். செல்போன் என்றான். இப்போது ஈமெயில், வாட்ஸ் ஆப், இன்ஸ்டாகிராம், டிவிட்டர் என்று அய்ரோப்பியக்காரன் அட்டகாசம் செய்கிறான்.**

**இண்டெர்நெட் இல்லாமல், எலெக்ட்ரானிக் கருவிகள் இல்லாமல் தகவல் தொடர்பு கட்டமைப்பு நமது சனாதனத்திலேயே இருக்கிறது. அதற்குத் தேவையான பொருட்கள், மிகவும் மலிவு. உச்சிக்குடுமி, பூணூல் தோற்றத்துடன் வேதம் படித்ததாகக் கூறிக்கொள்ளும் வேதப் பண்டிதர் மற்றும் ஒரு தர்ப்பைப்புல் கட்டு, அதுவே போதுமானது. இதை வைத்துக்கொண்டு இறந்து போன நமது குடும்பத்தினரின் ஆவிகளுடன் ’அவாள்’களால் பேச முடியும். அதுவும் நமது மூதாதையருக்கு தெரியாத சமஸ்கிருத மொழியிலேயே பேசுவார்கள். நமது மூதாதையர் விரும்பும் உணவுகளை நேரடியாக அனுப்புவார்கள். ஆனால் அசைவத்தை தர்ப்பைப்புல் ஏற்றுக்கொள்ளாது. ‘டோர் டெலிவரி’க்கு ஆட்கள் வேண்டாம், வேத மந்திர சக்தியே ‘டெலிவரியை’க் கட்சிதமாக முடித்து விடும்.**

**இப்பக்கூட பாருங்க, மகாளய அமாவாசை நாளில் நமது மக்கள் ‘வேத பண்டிதர்களை’ நோக்கி ஓடுகிறார்கள். ‘எங்க அப்பா, அம்மா, அண்ணன், தம்பிகளோட பேசுங்க சாமி; நான் வந்திருப்பதை வேத மந்திர சக்தியால் கூறுங்க சாமி. உங்களுக்கு புண்ணியமா போகும். உணவுப் பொருட்களை எல்லாம் எடுத்து வந்திருக்கோம், இதையும் மந்திரம் ஓதி அனுப்புங்க. நீங்க எவ்வளவு தட்சணைக் கேட்டாலும் தருகிறோம்’ என்கிறார்கள். இந்தத் தர்ப்பைப்புல் சக்தி பூமியில் வேலை செய்யாது. இதுவரை ‘நாசாவில்’ இன்னும் பிடிபடாத ‘பித்துருக்கள்’ இடம் மட்டும் தான் பேசும்.**

**இந்த நிலையில் நமது ஆளுநரிடம் தொடர்பு கொள்ள என்ன செய்யலாம் என்று திராவிடர் விடுதலைக் கழகத்தின் கருப்புச்சட்டை இளைஞர்கள் கூடி ஆலோசித்து ஒரு முடிவை எடுத்தார்கள். சரி தர்ப்பை பயன்படாத போது அஞ்சலட்டை போட்டு ஆளுநருக்கு எச்சரிக்கை விடுக்கலாம் என்று முடிவெடுத்தார்கள். தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும் என்ற இரண்டே வரிகளை அஞ்சலட்டையில் எழுதினார்கள். அந்த அஞ்சலட்டையில் இவர்கள் எழுதாமல் விட்ட வார்த்தைகளும் உண்டு. அந்த என்ன தெரியுமா?**

“ஆளுநரே! அந்தத் தொலைக்காட்சி விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலில் ‘திராவிடம்’ என்ற சொல் விடுபட்டதற்கு நான் காரணமல்ல என்று பொய் பேசாதீங்க. குழந்தைகள் பாடலைப் பாடும் போது ஒவ்வொரு வார்த்தைகளையும் நீங்களும் உச்சரிச்சீங்க. திடீர்னு ‘தெக்கணமும் திராவிடமும்” விடுபட்ட போது குழந்தைகள் பக்கம் திரும்பி, ஒரு புன் சிரிப்பைப் பரிசாக வழங்குனீங்க. அந்தக் காட்சியை நாங்க நேரலையிலேயே பார்த்தோம். தெரியாமல் நடந்துவிட்டது என்று நீங்கள் தப்பிக்க முடியாது”. இவைகள் தான் எழுதாமல் விட்ட வரிகள்.

**ஆளுநர் மாளிகையில் நாங்கள் அனுப்பிய அஞ்சல் அட்டைகள் கட்டுக்கட்டாக குவிந்திருக்கும்.**

**“அது காகித அட்டைகள் அல்ல,**
**அதுக்குள்ளே புதைந்து கிடப்பது எங்கள் உணர்வுகளின் நெருப்பு;**
**காலம் காலமாக எங்களை இழிவுபடுத்தும் சனாதனத்தின் மீதான வெறுப்பு;**
**தன்மானத்தோடு விளையாடாதே என எச்சரிக்கும் ஆப்பு.”**

**கோடங்குடி மாரிமுத்து**

# திராவிடர்கள் தீபாவளிக் கொண்டாடலாமா?

தீபாவளிக் கதை பற்றி சுமார் 10 வருடங்களுக்கு மேலாக எழுதியும் பேசியும் வருகிறேன். ஆதலால் விரித்து எழுத வேண்டியதில்லை; என்றாலும் குறிப்பு கொடுக்கின்றோம். தீபாவளிக் கதை மிகவும் அதிசயமானதும், ஆபாசமானதும், இழிவும், ஈனத் தன்மையும் பொருந்தியதாகும். பார்ப்பனர் சாபமாம்! மகாவிஷ்ணுவுக்கு வாயில் காப்பாளராக இருந்த இரு காவலர்கள் உத்தரவின்றி உள்ளே விட மறுக்கப்பட்ட இரண்டு பார்ப்பனர்கள் சாபத்தால் இரணியன் – இரண்யாட்சன் என்ற இரண்டு ராட்சதர்களாகப் பிறந்து விஷ்ணுவால் கொல்லப்பட்டு சீக்கிரம் மோட்சமடைய வேண்டுமென்று ஏற்பட்டுவிட்டதற்கிணங்க மூத்தவன் தேவர்களுக்குத் தொல்லை கொடுத்து வந்தான்; இளையவன் பூமியைப் பாயாகச் சுருட்டி எடுத்துக்கொண்டு ஓடி சமுத்திரத்திற்குள் நுழைந்து கொண்டான். தேவர்கள் வேண்டுகோளால் மூத்தவனைக் கொல்ல மகாவிஷ்ணு நரசிம்ம (சிங்க) அவதாரமெடுத்து வந்து கொன்றுவிட்டார். இளையவனான இரண்யாட்சனைக் கொல்ல மகாவிஷ்ணு வராக(பன்றி) அவதாரமெடுத்து வந்து சமுத்திரத்திற்குள் பாய்ந்து இரண்யாட்சனைக் கொன்று பூமியைக் கொண்டு வந்து பழையபடி விரித்துவிட்டுப் போய்விட்டார்.

விஷ்ணு பன்றி அவதாரமெடுத்து இரண்யாட்சனைக் கொன்றுவிட்டுத் திரும்புங்காலையில் பன்றி, தான் கொண்டுவந்த பூமியைத் தனக்கு என்னவேண்டுமானாலும் செய்ய உரிமை இருக்கிறதென்று கருதி அந்தப் பூமியையே அந்தப் பன்றி புணர்ந்ததாம். பூமியும் அதற்கு சம்மதித்து இடம் கொடுத்ததாம். அப்போது பூமி கர்ப்பமாகி ஒரு குழந்தையையும் பெற்றுவிட்டதாம்.

### நரகல் தின்பதால் நரகாசுரன்

அக்குழந்தைக்கு நரகாசுரன் என்று பெயரிட்டார்களாம். ஏன் அப்பெயர் இட்டார்கள் என்றால் நரகலைச் சாப்பிடுகின்ற பன்றிக்கும் நரகலைச் சுமக்கின்ற பூமிக்கும் குழந்தை பிறந்ததால் நரகன் என்று பெயர் இடாமல் வேறு என்ன பெயர் இடுவார்கள்? இப்படிப் பிறந்த இந்தக் குழந்தை வங்காளத்துக்கும், அசாமுக்கும் மத்தியில் உள்ள ஒரு பிரதேச அரசனாக இருந்து கொண்டு பிரம்மா மனைவியின் காதணியையும் வருணனின் ஆயுதத்தையும் பிடுங்கிக்கொண்டு, இந்திரனின் சிம்மாசனத்தையும் தூக்கி வர எத்தனித்தானாம். அதோடு தேவர்களுக்குத் தொல்லைகொடுத்தானாம். உலகத்தையும் துன்புறுத்தினானாம். தேவர்களுக்காக கிருஷ்ணபகவான் வந்து இந்த அசுரனை வதம் செய்தாராம். அந்த நாளைக் கொண்டாடுவதுதான் தீபாவளியாகும். இது என்ன கதை? இதில் அறிவு மானம் இருக்கிறதா?

### உருண்டையைச் சுருட்ட முடியுமா?

இரண்யாட்சன் பூமியை சுருட்டித் திருடிக் கொண்டு போகக் காரணம் என்ன? பூமி தட்டையாய் இருந்தாலல்லவா சுருட்ட முடியும்? அதுதான் உருண்டை ஆயிற்றே? பூமியை உருட்டிக்கொண்டல்லவா போயிருக்கவேண்டும்! அப்படியே சுருட்டினதாக வைத்துக்கொள்வதானாலும் சுருட்டினவன் எங்கே இருந்துகொண்டு பூமியைச் சுருட்டி இருப்பான்; ஒரு சமயம் ஆகாயத்தில் தொங்கிக்கொண்டு சுருட்டி இருந்தாலும் பூமியில் இருந்த மலை, சமுத்திரம், ஆறு, ஜீவப்பிராணி முதலிய சகலமும்தானே பாயாகச் சுருட்டப்பட்ட பாய்க்குள் சிக்கியிருக்க வேண்டும். அப்படியிருக்க, அவன் பூமியைத் தூக்கிக் கொண்டு ஒளிய வேறு சமுத்திரமேது? வேறு சமுத்திரமிருந்தால் அது எதன் மீது இருந்திருக்கும்?

### பன்றியுடன் போகமா?

அப்படி வைத்துக் கொண்டாலும் இந்தப் பூமியைத் திருப்பிக் கொண்டுவர விஷ்ணு அவதார மெடுப்பானேன்? அதுவும் பன்றி அவதாரமெதற்கு? அப்போது அது ஆகாரமாக எதைத் தின்று இருக்கும்? எதையோ தின்று தொலைந்து போகட்டும். இந்தப் பன்றி பூமியைப் புணர ஆசைப்படுவானேன்? கொண்டு வந்ததற்குக் கூலியா? அப்படியே தான் இருக்கட்டும்; இதற்கு இந்தப் பன்றியுடன் போகம் செய்ய பூமிதேவி இணங்கலாமா? இது என்ன கதை?

### திராவிடர் - ஆரியர்

மக்களை அசுரன், இராட்சதன், அரக்கன் என்று கூறி அவர்களை இழிவு செய்ய எழுதினதல்லாமல் வேறு என்ன இது? வங்காளத்தில் ஆரியர் வரும் முன்பு திராவிடர்கள்தான் ஆண்டு கொண்டிருந் திருக்க வேண்டும்! ஆரியர்கள் திராவிடர்களைக் கொல்வதானால் மானம், வெட்கம் பார்க்காமல் மிருகங்களுடன் புணர்ந்தாலும் சரி; மலத்தைத்தின்றாலும் சரி; ‘‘எப்படியான இழிவான அசிங்கமான காரியத்தைச் செய்தாவது கொல்லலாம்’’ என்கின்ற தர்மத்தை ஆரியர்களுக்குப் போதிக்க வந்த மனு நூல் போன்ற ஒரு ‘கோட்’ தானே ஒழிய, இப்புராணங்களுக்கு வேறு என்ன கருத்துச் சொல்ல முடியும்? ஆகவே, அப்போ்ப்பட்ட கதையில் ஒன்றான நரகாசுரன் கதையை நம்பி நாம் பண்டிகைக் கொண்டாடலாமா? நாம் திராவிடரல்லவா? நம் கடவுள்கள் மலம் தின்பதையும், நம் பெண் கடவுள்கள் பன்றியுடன் புணர்ச்சி செய்வதையும் ஒப்புக்கொள்ள நம்மால் முடியுமா? ஒப்புக்கொள்ளலாமா? நமக்கு மானம், வெட்கம், புத்தி ஒன்றுமே கிடையாதா? நம் தலைவனைக் கொன்றதை நாம் கொண்டாடும் அளவிற்கு மான ஈனம் அற்றவர்களா நாம்? நாம் வீர திராவிடரல்லவா? நம் இனமக்கள் தீபாவளிக் கொண்டாடலாமா? கண்டிப்பாய்க் கொண்டாடாதீர்கள்! கொண்டாடுவதானால் இந்தக் கதை கொண்ட புத்தகங்களை வாங்கி நடுவீதியில் வைத்து ஆண்கள் மிதியடியால் மிதி மிதியென்று மிதியுங்கள்; பெண்கள் முறத்தால் மொத்து மொத்து என்று மொத்துங்கள்!

**(‘குடிஅரசு’ 7.10.1944 இதழில் ‘சித்திரபுத்திரன்’ என்ற புனைபெயரில் பெரியார் எழுதியது)**

# விவேகானந்தருக்கு சுந்தரனார் பதிலடி!

*1890 என்பது திராவிட இன உணர்வு மிகுந்த வளர்ச்சி பெற்ற காலகட்டம். 1892 - இல் இப்பாடலை மனோன்மணியம் சுந்தரனார் எழுதுகிறார். 1890-இல், அயோத்திதாச பண்டிதர் திராவிட மகாஜன சபாவை உருவாக்குகிறார். 1892-ஆம் வருடம் ஏப்ரல் மாதத்தில் சென்னை விக்டோரியா டவுன் ஹாலில் கூடியுள்ள கூட்டத்தில், சென்னை மகாஜன சபை பிரதிநிதிகளுடன் “சாதி பேதமற்ற திராவிட மகாஜன சபையின் ஒரு பிரதிநிதியாய் அமர்ந்திருந்ததாகப் பதிவு செய்கிறார். 1885 - இல் திராவிட பாண்டியன் இதழ் வந்தது. தென்னிந்திய மக்கள் ஆரியர் அல்லாதவர்கள் என்றும், தென்னிந்திய மொழிகள் ஆரியத்திலிருந்து பிறக்கவில்லை என்றும், அறிஞர் பெருமக்கள் புரிந்து கொண்ட காலகட்டம் அது. ஆரியத்தையும் பார்ப்பனியத்தையும் அடித்து நொறுக்கும் நோக்கத்தில் அறிஞர்கள் பங்களிப்பு செய்து கொண்டிருந்த காலம் அது. தங்களுடைய போர்க் கருவியாக “திராவிட” என்ற சொல்லை கைக்கொண்டு சமூக விடுதலைக் கருத்தியல் புரட்சியில் ஈடுபட்டார்கள். இதற்கு பேராசிரியர் சுந்தரனாரும் விதிவிலக்கல்ல.*

*மனோன்மணியம் சுந்தரனாரிடம் மிகுந்து காணப்பட்ட உணர்வு ஆரிய எதிர்ப்பு. விவேகானந்தர் திருவனந்தபுரத்தில் ஒன்பது நாட்கள் தங்கி இருந்தபோது அவரும் சுந்தரனாரும் சந்தித்து பலமுறை பேசிக்கொண்டார்கள். இந்நிலையில் சுந்தரனாரின் விருந்தினராக அவருடைய வீட்டில் விவேகானந்தர் உணவு அருந்தினார். விவேகானந்தர் மனோன்மணியம் சுந்தரனாரிடம் கண்ட குறைபாடு அவர் இன உணர்வு உள்ளவராக இருக்கிறார் என்பதுதான். தம்மைத் திராவிட இனத்தவராக அவர் கருதுகிறார் என்பதுதான் அவர் மீது உள்ள குறையாக விவேகானந்தர் கண்டார்.*

*தான் ஹிந்து அல்ல என்றும், திராவிடன் என்றும் விவேகானந்தரிடம் பேராசிரியர் ஆணித்தரமாகக் கூறியதை K.சுந்தர்ராம ஐயர் அவர்கள் எழுதிய கட்டுரையில் குறிப்பிடுகிறார். Reminiscences of Swami Vivekananda எனும் இன்னொரு நூலிலிருந்து :*

*One remark of Professor Sundaram Pillai — that, as a Dravidian, he considered himself entirely outside the Hindu polity — put him somewhat out of court with the Swami, who, later on, re-marked of him that eminent as he was as a scholar, he had thoughtlessly given himself away to the sway of race prejudice, which already during his travels the Swami had noted as an un-pleasant characteristic of certain South Indian minds of the unbalanced or mediocre type. -“Reminiscences of Swami Vivekananda” -3rd edition 1983*

*அதுமட்டுமின்றி, சுந்தரனாரின் வீட்டில் உணவருந்திய அன்று பேசிக் கொண்டிருக்கும் போது, உங்களுடைய கோத்திரம் என்ன என்று பேராசிரியர் சுந்தரனாரிடம் விவேகானந்தர் கேட்டவுடன் அவர் ஆத்திரம் கொண்டார். ஆனால் விருந்தினரிடம் அதைக் காட்டுவது பண்பாகாது என்று அடக்கிக் கொண்டார், இதை அவரே தம் குறிப்பேட்டில் பதிவு செய்திருக்கிறார். பல நூல்களிலும் இக்கருத்து எடுத்தாளப்பட்டிருக்கிறது.*

*தன் குறிப்புப் புத்தகத்தில் மனோன்மணியம் சுந்தரனார் அவர்கள் இவ்வாறு பதிவு செய்கிறார்:*

*“உவப்போடு என்னுடன் பேசி மகிழும் உத்தம நண்பர் விவேகானந்தர் தங்கள் கோத்திரம் என்ன என்று வினா எழுப்பினார். வேறு ஒரு தினமாகில், வினாவினைக் கேட்ட நான் வெகுண்டிருப்பேன். உறவென விருந்துக்கு வந்த அந்த உயர்ந்த நண்பரிடம் நான் மெல்லிய குரலில், எனக்கும் கோத்திரத்திற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. தன்மானம் காக்கும் தென்னாட்டில் பிறந்த திராவிட இனத்தைச் சேர்ந்தவன் நான், என ஆத்திரமின்றிக் கோத்திரக் கேள்விக்கு விடையளித்தேன்.”*

*தமிழணங்கைப் போற்றி பாடுகின்ற சுந்தரனார் - ‘தமிழ நல் திருநாடு’ என்று கூட பாடி இருக்கலாம். அந்தச் சொல் அவருக்குத் தெரியாததல்ல. கடந்த காலத்தில் தமிழ்நாடு என்று இலக்கியங்களில் பயின்று வந்துள்ளதை நன்றாக அவர் அறிவார். ஆனால் ஆரியத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி, வருணத்தையும், கோத்திரத்தையும் எதிர்த்து நிற்கும் ஒரு போக்கு அப்போது முகிழ்த்திருந்த நிலையில், அந்த உணர்வோடு “ஆரியத்தை மறுக்கும் நிலப்பரப்பு” என்ற பொருளில், “ஆரியர் அல்லாத இனத்தவர் வாழும் நிலப்பரப்பு” என்னும் பொருளில், “திராவிட நல் திருநாடு” என்று அவர் குறிப்பிடுகிறார்.*

*இதுதான் விவேகானந்தருக்கும் கசப்பை தந்தது. பார்ப்பனிய உணர்வாளர்களுக்கும் கசப்பைத் தந்தது. இப்போதும் அந்தச் சொல் ஆரிய, பார்ப்பனிய, வர்ணாசிரம ஆதரவாளர்களுக்கும் கசப்பைத் தருகிறது.*

*இவை வரலாற்றுச் சுவடுகள். மனோன்மணியம் சுந்தரனார் எழுதிய பாடலுடன் தமிழினத்தின் விழிப்பு தொடங்கியது. ஆகவேதான் சுந்தரனாரை இதுவரை அத்தனை அறிஞர் பெருமக்களும், தமிழ்ப் புலவர்களும் போற்றிப் புகழ்ந்து இருக்கிறார்கள்.*

*இப்போது “திராவிட” என்ற ஒற்றைச் சொல் தங்கள் அரசியலுக்கு ஏற்க முடியாத ஒன்று என்பதற்காக, சுந்தரனாரின் பாடலில் கை வைக்க முற்படுவது என்பது அறிவுடைய செயல் அல்ல. ஒரு பாடலை அல்லது ஓர் இலக்கியத்தை நாம் படிக்கும் போது, அது எழுந்த காலம் மற்றும்அதன் வரலாற்றுப் போக்கோடு பொருத்திப் பார்த்து புரிந்து கொள்ள வேண்டும் என்பது அவசியம்.*

**– பேராசிரியர் த. செயராமன்**

## வினா விடை

• *நான் ஆட்சிக்கு வந்தால் தமிழ்த்தாய் வாழ்த்துக்குத் தடை போடுவேன் – சீமான்*

அதானே, எதுக்கு தமிழ்த்தாய் வாழ்த்து? நம்ம தமிழ்த்தேசியத்துக்கு பாரத ஒற்றுமைக் காக்கும் தேசிய கீதம் மட்டும் போதும்!

• *அயோத்தி ராமன் கோயில் தீர்ப்புக்கு கடவுள் நம்பிக்கை அடிப்படையில் ஒரு முடிவுக்கு வந்தேன். – தலைமை நீதிபதி சந்திரசூட்*

சட்டத்தின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கவில்லை என்பதை நேர்மையாக ஒப்புக்கொண்டதற்கு நன்றி!

• *ஆகம விதிப்படி ஏழுமலையான் கோயில் மேலே விமானம் பறக்கக் கூடாது. – செய்தி!*

அவ்வளவு ஆபத்து நிறைந்தப் பகுதியா சார்?

• *எதிர்த்து கேள்வி கேட்ட தில்லை தீட்சிதரை பொது தீட்சிதர் சபை சஸ்பெண்ட்! – செய்தி*

ஆகமத்தில் சஸ்பெண்ட், டிஸ்மிஸ், டிரான்ஸ்பெர் விதிகள் கூட இருக்குது போல! அடிச்சு விளையாடுங்க!

• *நடிகை கவுதமி அதிமுக கொள்கை பரப்புச் செயலாளர் – எடப்பாடி*

அவருக்கு பாஜக கொள்கை தானே தெரியும்? பரவாயில்லை, விடுங்க எந்த கொள்கையா இருந்தால் என்ன? இப்ப, அதுவா முக்கியம்?

• *அமெரிக்க அதிபர் வேட்பாளர் ட்ரம்ப் ரொட்டி சுட்டுக்கொடுத்து வாக்கு கேட்கிறார். – செய்தி!*

தமிழ்நாடு அமெரிக்காவுக்கே வழிகாட்ட தொடங்கிடுச்சு!

• *என்னுடைய எட்டு சதவீத ஓட்டுக்கள் 32 சதவீதமாக மாறும் போது என்னுடன் கூட்டணி பேசுவார்கள் – சீமான்*

பாவம் விஜய் கை கழுவிய சோகம்!

# பெரியார் - அடிகளார் மோதலும் நட்பும் (1)

**விடுதலை இராசேந்திரன்**



**சென்னை கழகத் தலைமை அலுவலகத்தில் 29.09.2024 அன்று நிமிர்வோம் வாசகர் வட்ட சார்பில் குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு நினைவுக்கூட்டம் நடந்தது. அடிகளார் படத்தைத் திறந்து வைத்து பொதுச்செயலாளர் உரை:**

வரலாறு என்ற விளக்குகளின் வெளிச்சத்தில் தான் நிகழ்கால நடைமுறைகள் மற்றும் செயல்திட்டங்களை வகுக்க முடியும். வரலாறு என்பது நிகழ்வுகளின் தொகுப்பு மட்டுமல்ல, அது சமூக இயக்கங்களால் சாத்தியமாக்கப்படும் சமூக மாற்றத்தை உள்ளடக்கியதாகும். அந்த வரலாறுகளில் இருந்து நாம் பல பாடங்களைக் கற்றுக்கொண்டுள்ளோம். சமூகம் இவைகளை எப்படி கடந்து வந்திருக்கிறது என்பதைப் பற்றிய வெளிச்சத்தைத் தருவதாக அமைந்திருக்கிறது.

1925இல் பெரியார் சுயமரியாதை இயக்கத்தையும், குடிஅரசு இதழையும் தொடங்கினார். இதே ஆண்டில் தான் சேரன்மாதேவி போராட்டமும் நடந்தது. 1924இல் வைக்கம் போராட்டம் நடந்தது. இதனடிப்படையில் பார்த்தால் இது திராவிட இயக்கத்துக்கு மிக முக்கியமான ஆண்டாகும். இதைப் பயன்படுத்தி இளைஞர்களுக்கு பல வரலாற்று செய்திகளைக் கொண்டு செல்லவேண்டிய பொறுப்பு நமக்கு உள்ளது.

குறிப்பாக 1925, காலகட்டத்தில் எத்தகைய முரண்பாடுகள் சமூகத்தில் இருந்தது என்பதை அறிய வேண்டியது அவசியம். அன்றைக்கு எழுந்த முரண்பாடு என்பது பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் என்ற அடிப்படை முரண்பாடு தான் அதுவே முதன்மையாக இருந்தது. காரணம் பார்ப்பனர்கள் மட்டும் தான் அரசியலிலும், சமூகத்திலும், பதவிகளிலும் நூற்றுக்கு நூறு ஆதிக்கம் செலுத்தி வந்த காலகட்டம். இன்றைக்கு ஜாதிப் பெருமை பேசிவருகிற உயர்ஜாதி உட்பட பார்ப்பனரல்லாத, ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவருமே அன்றைக்குச் சூத்திரர்களாக, இழி மக்களாக, கல்வி மறுக்கப்பட்டவர்களாகத்தான் வைக்கப்பட்டிருந்தனர். அந்தச் சூழ்நிலையில் தான் பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்ற பெயரில் நீதிக்கட்சி தொடங்கியது.

பார்ப்பனரல்லாதார் என்ற ஒரே குடையின் கீழ் அப்பிரிவுக்குள் அடக்கப்பட்டிருந்த தாழ்த்தப்பட்டோர் - பிற்படுத்தப்பட்டோர் - பெண்கள் - சிறுபான்மையினரை 'பிராமணர்' எதிர் 'சூத்திரர்' என்ற சமூக முரண்பாடுகளோடு பெரியார் அணிதிரட்டினார். சூத்திர இழிவை நிலைநிறுத்தும் புராணங்களையும், இதிகாசங்களையும் கடுமையாக விமர்சித்தார். இராமாயணத்தை எதிர்த்த போது சைவர்கள் பெரியார் பக்கம் நின்றனர். பிறகு பெரிய புராணத்தில் அவர் கை வைத்த போது சைவர்களுக்குக் கோபம் வந்துவிட்டது. சுயமரியாதை இயக்கத்துக்கும் சைவத்துக்கும் மோதல் வெடிக்கத் தொடங்கிய போது இதைத் தவிர்க்கும் முயற்சிகளும் நடந்தன. மறைமலை அடிகளாரின் சீடர் இளவழகன் போன்ற சைவ நெறியாளர்கள், சைவத்துக்கும் சுயமரியாதை இயக்கத்துக்கும் இடையே மோதல்களைத் தவிர்க்க முயற்சித்தனர்.

### குன்றக்குடி அடிகளாருக்கும் பெரியாருக்கும் இருந்த உறவு!

குன்றக்குடி அடிகளார் சைவத்தில் மூழ்கிப் போன ஒருவர். சைவ மடம் அனைத்துமே சைவத்தைப் பரப்புவதற்காக உருவாக்கப்பட்டவை. அந்த மடங்களிலே மடாதிபதிகளாக வரக்கூடியவர்கள் யாரென்றால் ஒரு குறிப்பிட்ட சைவ ஜாதியைச் சேர்ந்த உயர் வகுப்பினர் தான் அதில் மடாதிபதிகளாக வர முடியும். சைவம் என்பது பார்ப்பனியத்தை எதிர்த்து நின்றிருக்கிறது என்பது வரலாறு. அந்தச் சைவ அமைப்புகளுக்குள்ளேயே கருத்து மாறுபாடுகளும் இருந்தன.

சைவர்களில் மூன்று பிரிவினர் இருந்தார்கள். கடும் சைவர்கள், இடைநிலை சைவர்கள், சுயமரியாதை இயக்கச் சைவர்கள். தீவிரமான சைவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் வர்ணாசிரமத்தையும், ஜாதிக் கட்டமைப்பையும் மிகத் தீவிரமாகத் தூக்கிப் பிடித்துக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் பல மாநாடுகளை நடத்தி வர்ணாசிரம அமைப்பை நியாயப்படுத்தி பேசியிருக்கிறார்கள். தீண்டாமையை நியாயப்படுத்தி தீர்மானம் போட்டிருக்கிறார்கள்.

சைவத்தில் இரண்டாவதாக உள்ள இன்னொரு பிரிவானது, வர்ணாசிரமத்தையும், ஜாதி அமைப்பையும் நியாயப்படுத்தக் கூடாது. அவைகளைத் தவிர்த்துவிட்டு சைவத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று வலியுறுத்தியது. மூன்றாவதாக இருந்த ஒரு பிரிவானது, பெரியாரின் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை, பார்ப்பன - வைதிக எதிர்ப்புக் கொள்கைகளை பின்பற்ற வேண்டும் என்று சொன்னது.

சைவம் குறித்து பெரியார் கீழ்க்கண்ட கேள்விகளை எழுப்பினார்.

1. பார்ப்பன வேதம், பார்ப்பன புராணம் மற்றும் சங்கராச்சாரிகளை எதிர்ப்பதாகவும்,

> "ஆடும் புலியும் ஒன்றாக இருக்காது. ஆனால், சர்க்கஸில் ரிங் மாஸ்டருக்கு பயந்து ஆடும் புலியும் ஒன்றாக இருப்பது போல கொஞ்சிக் குலாவும். அதேபோல மக்கள் நலன் என்னும் ரிங் மாஸ்டர் எங்கள் இருவரையும் அடக்கி ஒடுக்கி செயல்படுங்கள் என செயல்பட வைத்துள்ளது"

அவற்றோடு எங்களுக்கு ஒட்டு உறவு கிடையாது என்று கூறும் சைவ சமயத்துக்காரர்கள், தங்கள் கடவுளான சிவனுக்கு மட்டும் கந்த புராணம், சிவ மகா புராணத்தில் இருந்து ஆதாரம் தேடுவது ஏன்? இந்தப் புராணங்களை ஒதுக்கிவிட்டால் சைவத்தில் சிவனுக்கு எதாவது இடம் இருக்கிறதா?

2. சைவம் உள்பட இந்து வைணவக் கடவுள்களை எல்லாம் எடுத்துக்கொண்டால் அந்தக் கடவுள்கள் எல்லாம் தேவர்களின் யாகத்தை எதிர்த்து வந்த அரக்கர்களை அழித்தவர்கள் என்கிற அடிப்படையில் சித்தரிக்கப்படுபவர்களாக தானே இருக்கிறார்கள். அதாவது அரக்கர்களை அழிப்பது, வேதத்தை எதிர்த்தான், தேவர்களுக்கு தொல்லை கொடுத்தான் ஆகவே அவர்களை அழிப்பதற்காக நான் வந்தேன் என அவதாரம் எடுத்த கடவுளர்களாக உள்ளனர்.

3. சைவ சமயத் தலைவர்களும் (கடவுள்) கூட வேதங்களையும் யாகங்களையும் காப்பாற்றுவதற்கும், அவற்றை எதிர்த்தவர்களை அழிப்பதற்கும் தோன்றியவர்கள் தான் என்பதை உங்களால் மறுக்க முடியுமா? வேதம், யாகம் ஆகியவற்றைக் காப்பாற்ற வந்த கடவுள்கள், ஆரியர்களால் புனையப்பட்ட புராணங்கள் ஆகியவற்றை ஒதுக்கிவிட்டால் சைவம் என்ற ஒன்று இல்லை என்பதை உங்களால் மறுக்க முடியுமா?

4. நீங்கள் பாடுகிற தேவாரத்திற்கோ திருவாசகத்திற்கோ தமிழ் மறைக்கோ சைவத்தில் எங்காவது இடம் இருக்கிறதா என்று பெரியார் கேட்டார்.

ஆக சைவம், ஆகமம், தேவாரம், திருவாசகம் போன்ற வார்த்தைகளும் சைவக் கடவுள்களின் பெயர்களும், கடவுள்களின் மனைவி, பிள்ளைகளின் பெயர்களும் முற்றிலும் ஆரியத்தின் மொழியிலேயே ஏன் இருக்கிறது? அப்பெயர்களுக்கு புனையப்படும் கதைகளும், புராணங்களும் பெரும்பாலும் ஆரிய மூலத்தில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டதாக இருப்பது ஏன்? என்ற கேள்வியைச் சைவத்தை நோக்கி எழுப்புகிறார் பெரியார்.

ஆரியத்துடன் பின்னிப் பிணைந்ததாகவே நீங்கள் பேசும் சைவம் இருக்கிறது. உதட்டளவில் நாங்கள் ஆரியத்தை எதிர்க்கிறோம், பார்ப்பனியத்தை எதிர்க்கிறோம் என்று சொல்லிவிட்டு நீங்கள் பார்ப்பனியத்திற்கு துணை போகிறவர்களாகவே இருக்கிறீர்கள் என்று கேட்டார் பெரியார். மறைமலை அடிகள் தீவிர சைவராக இருந்து பிறகு கருத்தை மாற்றிக்கொண்டார். திரு.வி.கவும் சைவத்தில் இருந்தவர்தான், பெரியாரோடும் பயணித்துள்ளார். சைவர்களுக்குள்ளேயே சண்டைகள், மோதல்கள் நிகழ்ந்த வரலாற்று நிகழ்வுகள் உண்டு.

இந்தப் பின்னணியில்தான் தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்கும் தந்தை பெரியாருக்கும் எப்படி உறவு ஏற்பட்டது என்பதை நாம் பார்க்க வேண்டியுள்ளது. பெரியார் ஒரு அடிப்படையான செய்தியைச் சொல்கிறார். நான் பகுத்தறிவு பேசுகிறேன், அடிகளார் மதத்தைப் பற்றிப் பேசுகிறார். நாங்கள் இருவரும் எப்படி ஒன்றாக சேர்ந்து பயணிக்க முடியும்? என்ற கேள்வியைப் பெரியார் எழுப்பி அதற்கு பதில் கூறுகிறார். மதத்திற்கும் பகுத்தறிவுக்கும் என்ன தொடர்பு என்பதைப் பற்றி 'உண்மை' இதழில் ஒரு கட்டுரை எழுதினார். குன்றக்குடி அடிகளார் படத்தை அட்டைப் படமாகப் போட்டு சிறப்பிதழாக வெளிவந்தது. அந்தக் கட்டுரையில் நாங்கள் ஏன் குன்றக்குடி அடிகளாரை ஆதரிக்கிறோம் என்பது குறித்தும், தங்களுக்கும் பகுத்தறிவுக்கும் மதத்துக்கும் உள்ள தொடர்பு என்ன என்றும் விளக்குகிறார் பெரியார்.

**'உண்மையான மதம், உண்மையான பகுத்தறிவு ஒன்றுபட்டு செயல்படுவது கேடு ஆகாது. ஆனால், உண்மையான மதம் என்ற ஒன்று நாட்டில் இருக்கிறதா? இல்லை. தான் வாழ்வதற்கும் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளவும் மதம் மக்களைப் பயன்படுத்திக்கொண்டு இருக்கிறதே தவிர, மக்கள் வாழ்க்கைக்கும், மக்களின் முன்னேற்றத்திற்கும் மதம் பயன்படுவது கிடையாது. மதத்தைச் சார்ந்தவர்களின் குலத் தொடர்பு ஒன்று இருக்கிறது. சைவம் என்றால் சைவத்துடனும், வைணவன் என்றால் வைணவர்களுடனும், இந்து என்றால் இந்துக்களுடனும் தொடர்பில் இருப்பார்கள். ஆனால், பகுத்தறிவு என்பது அனைத்து மதத்தைச் சேர்ந்த மக்களோடும் தொடர்பு கொண்டு இருக்கிறது.**

**சைவம் என்றால் விபூதி பூசிக்கொள்ள வேண்டும், கழுத்தில் ருத்ராட்ச மாலை அணிய வேண்டும் எனச் சில நெறிகள் உள்ளது. வைணவம் என்றால் நெற்றியில் நாமம் இட வேண்டும் என்ற நெறி உள்ளது. இப்படி உங்களுக்கு என்று தனித்தனியாக நெறிமுறைகளைப் பிரித்துக்கொண்டே செல்கிறீர்கள்'** என்று எழுதுகிறார். அதாவது மதம் *Exclusive*. ஆனால், பகுத்தறிவு என்பது *Inclusive*. எல்லா மதத்துக்கானதாகவும், எல்லா மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்வதாகவும் இருப்பது பகுத்தறிவு. மதம் தன்னுடைய *Survival* -க்காக மட்டுமே போராடுகிறது. பகுத்தறிவு அனைத்து மக்களுக்குமான *Survival*-க்காக போராடுகிறது.

மேலும் தொடர்ந்து எழுதுகிறார். **'இரண்டு வெவ்வேறு துருவங்களாக அடிகளாரும் நானும் ஏன் கைகோர்த்துள்ளோம். அடிகளார் மதவாதி, நான் பகுத்தறிவுவாதி. எப்படி கைகோர்த்துள்ளோம் என்றால், ஆடும் புலியும் ஒன்றாக இருக்காது. ஆனால், சர்க்கஸில் ரிங் மாஸ்டருக்கு பயந்து ஆடும் புலியும் ஒன்றாக இருப்பது போல கொஞ்சிக் குலாவும். அதேபோல மக்கள் நலன் என்னும் ரிங் மாஸ்டர் எங்கள் இருவரையும் அடக்கி ஒடுக்கி செயல்படுங்கள் என செயல்பட வைத்துள்ளது'** என்று பெரியார் விளக்குகிறார்.

குன்றக்குடி அடிகளார் தஞ்சை மாவட்டத்தில் பிறந்தவர். 1952ஆம் ஆண்டு அவர் குன்றக்குடி மடாதிபதியாக வருகிறார். அவர் வந்தவுடனேயே மகா சன்னிதானங்களைப் பல்லக்கில் அமர வைத்து ஊர் முழுவதும் சவாரி செய்யும் பட்டணப் பிரவேசம் வழக்கத்தை ஒழித்துவிட்டார். மதம் என்ற எல்லையைக் கடந்து தமிழ், தமிழ் இலக்கியம், தமிழர் பண்பாடு என்ற துறைகளில் குன்றக்குடி அடிகளார் படிக்க ஆரம்பித்தார், சிந்திக்கவும் ஆரம்பித்தார். அதே நேரத்தில் ஒரு தீவிரமான சைவராகவே அவர் இருந்துள்ளார். பேரறிஞர் அண்ணா பெரிய புராணத்தைக் கடுமையாக விமர்சித்து திராவிட நாடு பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதுகிறார். உடனே குன்றக்குடி அடிகளார் 'தார்மீக இந்து' என்ற பத்திரிகையில் அண்ணாவைக் கடுமையாக தாக்கி பெரிய புராணத்தை நியாயப்படுத்தி ஒரு கட்டுரை எழுதுகிறார்.

(தொடரும்)

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# சேலத்தில் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம்!

*__சேலம்:__ பெரியார் பல்கலைக்கழக நிதியில் ஒன்றிய அரசின் விக்சித் பாரத் (வளரும் பாரதம்) திட்ட பரப்புரை மேற்கொள்ள வருகைவந்த ஆளுநர் ஆர்.என். ரவிக்கு கழக சார்பில் 16.10.2024 அன்று சேலம் பெரியார் பல்கலைக்கழக எதிரில் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடந்த இந்தப் போராட்டத்தில், கருப்புக் கொடி ஏந்தி ஆளுநருக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பப்பட்டன. பின்னர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி உள்பட 100க்கும் மேற்பட்ட கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டு தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டனர்.*




*அப்போது செய்தியாளர்களிடம் பேசிய கழகத் தலைவர் கொளத்தூர் மணி,*

***“ஆளுநர் என்பது ஒரு அலங்கார பதவி தான். அவருக்கு என்று தனித்த அதிகாரங்கள் எதுவும் இல்லை. மக்களால் தேந்தெடுக்கப்பட்டவர் அல்ல. ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட ஊழியர் மட்டுமே. குடியரசுத் தலைவர் போல எழுதிக் கொடுக்கப்பட்ட உரையைப் படிக்க வேண்டிய ஆளுநர், சனாதானத்தைப் பரப்புவதும், திருக்குறளைத் திரிப்பது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார். தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு எதிரான திட்டங்களைத் தொடர்ந்து செய்து வருகிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி. 6 பல்கலைக்கழகங்களுக்கு துணை வேந்தர் இல்லாததற்கு ஆளுநர் தான் காரணம்”*** *என்றெல்லாம் குற்றம்சாட்டினார்.*

*ஆர்ப்பாட்டத்தில் கழகப் பொருளாளர் திருப்பூர் சு.துரைசாமி, கழக வெளியீட்டுச் செயலாளர் இராம.இளங்கோவன், கழக அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, கழகத் தலைமைக்குழு உறுப்பினர்கள் காவை ஈஸ்வரன், சூலூர் பன்னீர்செல்வம், சக்திவேல், கழக சமூகவலைதளப் பொறுப்பாளர் பரிமளராசன், சேலம் (மே) மாவட்டத் தலைவர் சூரியகுமார், சேலம் (மே) மாவட்டச் செயலாளர் கோவிந்தராஜ், சேலம் (கி) மாவட்டச் செயலாளர் டேவிட், மாவட்டத் தலைவர் கருப்பூர் சக்திவேல், மாவட்ட அமைப்பாளர்கள் ஏற்காடு பெருமாள், நங்கவள்ளி சீ.அன்பு, சேலம் மாவட்ட இளைஞரணிச் செயலாளர் சு.பிரபாகரன், சேலம் மாநகரச் செயலாளர் ஆனந்தி, சேலம் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திவ்யா, நாமக்கல் மாவட்டத் தலைவர் சாமிநாதன், ஈரோடு வடக்கு மாவட்டத் தலைவர் நாத்திக ஜோதி, கிருஷ்ணகிரி மாவட்டத் தலைவர் வாஞ்சிநாதன், சேலம் மாநகர அமைப்பாளர் மோ.பாலு, திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில் ராசு, சேலம் மாவட்ட இளைஞரணித் தலைவர் ஏற்காடு தேவப்பிரகாஷ், தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் ச.நாகராஜ் உள்ளிட்ட 100க்கு மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.*

## அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி தொடர்ந்த வழக்கு

# ஈரோட்டில் ஆக்கிரமிப்புக் கோயில் இடிப்பு!

*ஈரோடு கள்ளுக்கடைமேடு, ராம பக்த ஆஞ்சநேயர் கோயில் ஆக்கிரமிப்பைச் சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி ஈரோடு மாநகராட்சி நிர்வாகம் 19.10.24 அன்று இடித்து அகற்றியது. ஈரோடு, கள்ளுக்கடை மேடு பகுதியில் கடத்த 20 ஆண்டுக்கும் மேலாக ராமபக்த ஆஞ்சநேயர் கோயில் உள்ளது. இந்த கோயில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு கட்டப்பட்டிருந்தது.இந்தக் ஆக்கிரமிப்பு கோயிலால் பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறும், சாலை விபத்துகளை ஏற்படுத்தும் அபாயமும் ஏற்பட்டு இருந்தது.*

*எனவே அந்த ஆக்கிரமிப்பு கோயிலை அகற்றி மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தை மீட்க வேண்டும் எனத் திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாநில அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி அவர்கள் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். அமைப்புச் செயலாளர் தொடர்ந்த வழக்கின் அடிப்படையில் நீதிமன்றம் கொடுத்த உத்தரவின் பேரில் ஈரோடு மாநகராட்சி நிர்வாகம் அளவீடு செய்து 2004 சதுர அடி இடம் மாநகராட்சிக்குச் சொந்தமானது என்றும், சாலையோரம் உள்ள அந்த இடத்தை ஆக்கிரமிப்புச் செய்து கோயில் கட்டப்பட்டிருப்பதையும் உறுதி செய்தது. இந்த வழக்கு விசாரணை முடிந்து, கடந்த 2023ஆம் ஆண்டு நவம்பரில் கோயிலை அகற்ற மாநகராட்சி நிர்வாகம் சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.*



*அதனைத்தொடர்ந்து, மாநகராட்சி நிர்வாகம் அந்தக் கோயில் நிர்வாகியும் இந்து முன்னணியின் நிர்வாகியுமான வெங்கடேசன் என்பவருக்கு முறையாக தோட்டீஸ் வழங்கி ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு கால அவகாசம் வழங்கியது. ஆனாலும் அந்த ஆக்கிரமிப்புக் கோயில் அகற்றப்படாமல் நீதிமன்ற உத்தரவு நிறைவேற்றப்படாமல் இருந்தது இந்நிலையில் நீதிமன்ற உத்தரவை மதிக்கத் தவறியதாகவும் உடனடியாக நீதிமன்ற உத்தரவின் படி ஆக்கிரமிப்புக் கோயிலை அகற்ற வேண்டும் எனக் கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி மீண்டும் நீதிமன்றத்தை அணுகி புகார் தெரிவித்தார். அப்புகாரை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் வரும் 22ஆம் தேதிக்குள் ஆக்கிரமிப்பை அகற்றி அது குறித்த அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என மாநகராட்சி நிர்வாகத்தை அறிவுறுத்தியது.*

*இதையடுத்து, 18.10.24 அன்று குறிப்பிட்ட ஆஞ்சநேயர் கோயில் மற்றும் அதே பகுதியில் உள்ள ஆட்டோ ஸ்டேண்டு ஆகியவற்றை அகற்றப்போவதாக மாநகராட்சி நிர்வாகத்தினர் அறிவித்திருந்தனர். அதன்படி, ஆக்கிரமிப்பை அகற்றச் சென்றபோது, கோயில் நிர்வாகியும், ஆட்டோ சங்க நிர்வாகிகளும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து, ஈரோடு வருவாய்க் கோட்டாட்சியர் சதீஷ்குமார் முன்னிலையில், ஆஞ்சநேயர் கோவில் நிர்வாகி, பாஜக, நிர்வாகிகள் மற்றும் ஆட்டோ சங்க நிர்வாகிகள் மற்றும் மாநகராட்சி 4வது மண்டல உதவிஆணையர் கிருஷ்ண மூர்த்தி, தாசில்தார் முத்துக்கிருஷ்ணன் உள்ளிட்டோர் பேச்சுவார்த்தை நடத்தினர். அதைத்தொடர்ந்து, நீதிமன்ற உத்தரவின்படி அளவீடு செய்து, ஆக்கிரமிப்புகள் சுட்டிக் காட்டப்பட்டன. இதையடுத்து அனைவரும் முடிவை ஏற்றுச் சென்றனர். அதைத்தொடர்ந்து, காலை 9 மணியளவில், மாநகராட்சி நிர்வாகத்தினர் பலத்த போலீஸ் பாதுகாப்புடன், கோயிலின் விரிவுபடுத்தப்பட்ட கான்கிரீட் கட்டிடம் மற்றும் இதர பயன்பாடுகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்த தடுப்புகளைப் பொக்லைன் இயந்திரம் உதவியுடன் இடித்து அகற்றினர்.*

**புரட்சிப் பெரியார் முழக்கம்**

**ஆண்டு கட்டணம்**

**ரூ.300/-**

**அய்ந்தாண்டு கட்டணம்**

**ரூ.1500/-**

தொடர்புக்கு : ஆசிரியர், 15, தோழமை, வெங்கடேஸ்வரா நகர், பெருங்குடி, சென்னை - 96, பேச : 89733 41377

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : October 24, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran